ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2391/11 - 2024 ජූලි මස 02 වැනි අඟහරුවාදා - 2024.07.02

2391/11 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: BD/BD/LND/3/5/46.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2016/WS/508.

பொது மக்கள் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தின் பதுளை பிரதேச செயலகப் பிரிவின் ரில்பொல கோரளையின் இலக்கம் 78B, பதுளை கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் பதுளை கிழக்கு (பிரிவு இல. 06, பதுளை மாநகர சபை எல்லைக்குள்) பிரதேசவியல் நில அளவையாளரால் தயார் செய்யப்பட்ட ஆ.நி.வ 756, துண்டு இல. 1இல் காணப்படும் காணிகளின் முழு விஸ்தீரணம் 0.0126 ஹெக்டயார் கொண்ட கீழ் விபரிக்கப்படும் காணித்துண்டின் விபரங்கள்:

**துண்டு இல. 1 - காணியின் பெயர்: ஒயவேலன; விபரம்: தற்காலிக கலப்புப் பயிர்ச்செய்கை உண்டு; உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0126 ஹெக்டயார்.**

வடக்கு: பாதை (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் உரிமையாளரை இனங்காண முடியாத ஒயவேலன தோட்டம்; கிழக்கு: உரிமையாளரை இனங்காண முடியாத ஒயவேலன தோட்டம் மற்றும் பதுளு ஓயா; தெற்கு: பதுளு ஓயா மற்றும் உரிமையாளரை இனங்காண முடியாத ஒயவேலன தோட்டம்; மேற்கு: பாதை (வீதி அபிவிருத்தி அதிகார சபை).

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பதுளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

துஷாரி அனுராதா நாணயக்கார,
பிரதேச செயலாளர்
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,

EOG 07 - 0014

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/UNU/4/6/LA/பி.செ/வீதி.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2013/PC/595.

2024, சனவரி மாதம் 06 ஆந் திகதிய 2365/74 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசுக்கு காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலின் விசாரணைத் திகதி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு உடுநுவர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்த வேண்டும்.

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்க வேண்டும். உரிமை கோருதல் தொடர்பான ஆவணங்கள் விசாரணையின்போது முன்வைக்கப்படல் வேண்டும்.

ஆர். ரீ. பீ. சுமனசேகர,
பிரதேச செயலாளர்
உடுநுவர.

பிரதேச செயலகம்,
உடுநுவர,
2024, யூன் 24.

EOG 07 - 0015

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.